**செ. கு. எண்: 124** **நாள்: 20.07.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – 20.7.2020

தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ராஜம்மாள் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 19.7.2020 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனைஅடைந்தேன்.

தூத்துக்குடி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ராஜம்மாள் அவர்கள் பொது வாழ்வில் தன்னை அர்பணித்துக் கொண்டு, தூத்துக்குடி தொகுதி மக்களின் நலன்களுக்காக உழைத்தவர். தொகுதி மக்களின் அன்பை பெற்றவர்.

திருமதி ராஜம்மாள் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**